**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 422 / 2021 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 4 |
| Name | : | மாரிக்குமார், வயது 39 |
| Father Name/Husband Name | : | பெருமாள் |
| Village | : | முத்துநகர் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | டிரைவர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of September 2022.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது முத்துநகரில் வசிக்கிறேன். எதிரி முத்துராமலிங்கம் என்பவரை தெரியும் அவரை 22.07.2021 ஆம் தேதி காவல்நிலையத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக பார்த்தேன். அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை பார்த்தால் அடையாளம் தெரியும்.
2. கடந்த 22.07.2021 ஆம் தேதி இரவு சுமார் 09.30 மணியளவில் சுப்பிரமணியன் என்பவரும் கிழக்கு காவல்நிலையம் வழியாக சென்று கொண்டிருந்த போது கற்பகவள்ளி என்பவரிடம் நகைகளை ஏமாற்றி வாங்கி கையாடல் செய்தது தொடர்பாக போலிசார் கேட்டுகொண்டதன் பேரில் எங்கள் முன்னிலையில் எதிரி முத்துராமலிங்கம் என்பவரை விசாரித்த போது வழக்கின் தொடர்புடைய நகையை DRP பெனிபிட் வங்கியில் அடகு வைத்திருப்பதாகவும் அந்த அடகு ரசீதை வீட்டில் வைத்திருப்பதாகவும் கூறினார்.
3. பின்னர் நான், ஆய்வாளர் மற்றும் போலிஸ்பார்ட்டியுடன் எதிரியின் வீட்டிற்கு சென்று நகை அடகு ரசீதை போலிசார் கைப்பற்றினார்கள். பின்னர் மறுநாள் 23.07.2021 ஆம் தேதி மேற்படி வங்கிக்கு சென்று மேலாளரிடம் சொல்லி நகைகளை எடுத்து கொடுத்தார்கள். அதனை போலிசார் கைப்பற்றினார்கள்.
4. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இரண்டு அத்தாட்சியில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 மற்றும் நகைகள் அடகு வைத்ததற்கான அடமான ரசீதை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள இரண்டாவது**

**கையொப்பம் அ.சா.ஆ.3 மற்றும் DRP வங்கியில் நகையை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

1. **நீங்களும் சாட்சி சுப்பிரமணியனும் மற்றோரு சாட்சி பாலமுருகன் ஒன்றாக லோடுமேனாக வேலை செய்கிறீர்கள் என்று சொன்னால்** நான் டிரைவர் அவர்கள் லோடுமேனாக வேலை செய்கிறார்கள்.
2. **வழக்கு சம்பவத்திற்கு முன்னர் நீங்கள் மூவரும் அறிமுகமானவர்கள் என்றால்** சுப்பிரமணியனை தெரியும். பாலமுருகனை தெரியாது.
3. **போலிசார் உங்களை விசாரணைக்காக அவர்கள் உடன் இரண்டு நாட்கள் வைத்திருந்தார்கள் என்றால்** இல்லை.
4. **ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நீங்ள் கையொப்பம் செய்தீர்கள் என்றால்** இல்லை நான் சென்ற பிறகு தான் தயார் செய்தார்கள்.
5. **நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால்** தெரியும். **நகையை திருப்புவதற்கு நீங்கள் போலிசாருடன் சென்றீர்களா என்றால்** சென்றேன்.
6. **மேற்படி நகையை யார் முன்னிலையில் திருப்பி கைப்பற்றினார்கள் என்றால்** ஆய்வாளர், வங்கி மேலாளர் என்னிடமும் சுப்பிரமணியனிடமும் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தோம்.
7. **போலிசார் உங்களிடம் வாக்குமூலம் வாங்கி கையொப்பம் போட்டுக்கொடுத்தீர்களா என்றால்** இல்லை. **சம்பவத்திற்கு பின்னர் உங்களை போலிசார் விசாரித்தார்களா என்றால்** 22, 23 தேதிகளில் விசாரித்தார்கள் அதன் பின் விசாரிக்கவில்லை.
8. **நீங்கள் கையெழுத்து போட்ட பேப்பரில் இந்த வழக்கு சொத்தை தவிர வேறு எந்த எந்த சொத்துக்களை ஒப்படைத்தார் என்ற விவரம் தற்போது உங்களால் சொல்ல முடியுமா என்றால்** அது எனக்கு தெரியாது.
9. **எதிரி முத்துராமலிங்கம் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன பிரச்சனை காரணமாக இது போன்ற குற்ற செயலில் ஈடுபட்டார் என்று சொன்ன விவரத்தை தற்போது உங்களால் சொல்ல முடியுமா என்றால்** தற்போது சொல்ல முடியாது.
10. **நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சி அறிக்கிறீர்கள் என்றால்** சரியல்ல.
11. **போலிசாருடன் எதிரி வீட்டிற்கு சென்று நகை சீட்டை**

கைப்பற்றியதாக சொல்வதும் வங்கியில் இருந்து நகையை மீட்டதாக சொல்வதும் போலிசார் உடன் நீங்கள் இருந்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அ.சா.1ன் கணவருடன் நீங்கள் வேலை பார்ப்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

12. எதிரியின் வீட்டிற்கு போகும் போது எதிரியின் வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் வீட்டில் யாரும் இல்லை. வீடு பூட்டியிருந்ததா என்றால் இல்லை பூட்டவில்லை கதவு மட்டும் மூடியிருந்தது.
13. எதிரியின் வீட்டில் இருந்த நகைசீட்டை எங்கிருந்து எடுத்தார்கள் என்றால் போலிசார் ரூமிற்குள் சென்று எடுத்தார்கள் நான் ஹாலில் இருந்தேன்.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.